# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு
## 2015/2016 (August 2018)

## EC 321 3 பிரயோகப் பொருளியல்

நேரம் : 3 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் குறைந்தது மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி I

01. சுதந்திர இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றங்கள் பொருளாதாரக் கொள்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

   I. இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றபோது அதன் பொருளாதாரத்தில் காணப்பட்ட இயல்புகள் எத்தகையது?
   II. இலங்கை 1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு மாறியமைக்கான காரணங்கள் யாவை?
   III. சுதந்திரத்தின் பின் இலங்கையின் தொழில்வாய்ப்புக் கட்டமைப்பு மாற்றம் பற்றி கருத்துரைக்குக.
   IV. வேலைவாய்ப்பில் சுற்றுலாத்துறை பெறும் வகிபாகம் யாது?

(5x4= 20 புள்ளிகள்)

02. 2017இல் இறக்குமதிகள் மீதான செலவீனங்கள் கணிசமான அளவு அதிகரித்தமைக்கு சீரற்ற வானிலை நிலைமைகளுடன் தொடர்புபட்ட உயர் இறக்குமதிகள் மற்றும் பன்னாட்டுப் பண்டங்களின் விலைகளின் நிலைப்படுத்தல் என்பனவே காரணமாகும்.

   I. வர்த்தக கட்டமைப்பு மாற்றம் என்பதனால் கருதப்படுவது யாது?
   II. சுதந்திரத்திற்குப் பின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டமைப்பு மாற்றம் குறித்து உமது நிலைப்பாடு என்ன?
   III. இலங்கையில் இடைநிலைப் பொருள் இறக்குமதி அதிகரித்தமைக்கான காரணங்கள் யாவை?
   IV. முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை ($GSP^{+}$) என்பதனால் கருதப்படுவது யாது?

(5x4= 20 புள்ளிகள்)

03. 2017இல் நட்டாண்டுக் குடித்தொகை 1.1 சதவீத ஆண்டு வளர்ச்சியுடன் 21.4 மில்லியனில் மதிப்பிடப்பட்டுள்ளதுடன் வளர்ச்சி வீதம் 2016இன் வீதத்துடன் மாற்றமின்றிக் காணப்பட்டது.

   I. "சனத்தொகை அதிகரிப்பு எப்போதும் பொருளாதாரத்திற்கு பாதக விளைவை ஏற்படுத்தாது." இக் கூற்றினை நீர் ஏற்பீரா? காரணம் தருக.
   II. பருமட்டான பிறப்பு வீதத்தை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
   III. சனத்தொகைப் பொறி என்பதால் கருதப்படுவது யாது?

IV. சனத்தொகை வெடிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாது?

(5x4= 20 புள்ளிகள்)

## பகுதி II

04. இலங்கையின் பொருளாதாரத்திற்கு உத்வேகமளிப்பதில் இலங்கை கிராமி பொருளாதாரத்தின் வகிபாகம் குறித்து விவாதிக்குக.

(20 புள்ளிகள்

05. "புதிய கைத்தொழில்மயமாகிய நாடு என்ற அந்தஸ்தினை அடைய இலங்கை இன்னு பல தடைகளை தாண்டவேண்டியுள்ளது". ஆராய்க.

(20 புள்ளிகள்

06. "தேறிய எண்ணெய் இறக்குமதி செய்கின்ற சிறிய நாடான இலங்கை உலக சந்தையி எண்ணெய் விலையை ஏற்கும் நாடாக இருக்கிறது". உலக சந்தையில் எண்ணை விலை அதிகரிப்பானது இலங்கைப் பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. ஆராய்க.

(20 புள்ளிகள்

07. பெருந்தோட்டத்துறையின் அறிமுகமானது இலங்கைப் பொருளாதாரத்தில் ப மாற்றங்களை ஏற்படுத்தியது. ஏற்பீரா? நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்

(5x20= 100 புள்ளிகள்